**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102194

1. District மாவட்டம் : Chennai Dt. PS: காவல்நிலையம் CC-I Dett. Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 8/2022 Date: நாள் 18.10.2022

2. (i) Act சட்டம்: PC ACT Sections பிரிவுகள்: Sec. 7 of PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 11.10.2022 Date to : நாள் வரை 16.30 Hrs.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.2022 Time : நேரம் 14.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக WRITTEN

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Approximately 20 KM North
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Banavedu Thottam village Panchayat Office
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Rathinakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o Arumuga Pandiyan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Software (g) Address : முகவரி No.5, 4th Street, Ponniyamman Nagar, Karayanchavadi, Poonamallee, Ch-56

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Gandhi, Panchayat Secretary, Banavedu Thottam village Panchayat.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/ Separate Sheet Enclosed herewith /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Rathnakumar . 18/10/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Insp. CCB 18/10/2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18. 10. 2022.

Name: பெயர் C. SASIKALA,
Rank: நிலை Inspector of Police, No. எண் ..........
VBAC, CC-II Deft,
Ch-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

FIR continuation to column No.12 of FIR in Cr.No.8/AC/2022/CC-I

17.10.2022-ந் தேதி 14.00 மணியளவில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு-1-ன் காவல் ஆய்வாளர் C.சசிகலா, ஆகிய நான் அலுவலகத்தில் பணியிலிருந்த போது சென்னை-56, பூவிருந்தவல்லி, கரையான்சாவடி, பொன்னியம்மன் நகர், 4-வது தெரு, எண் -5 -ல் வசிக்கும் திரு.ஆ. ரத்தினகுமார், த/பெ. ஆறுமுகபாண்டியன் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை மேற்கொண்டு இன்று 18.10.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் ஆ.ரத்தினகுமார், த/பெ. ஆறுமுகபாண்டியன், எண்.5, 4வது தெரு, பொன்னியம்மன் நகர், கரையான்சாவடி, பூவிருந்தவல்லி, சென்னை-56 பெறுநர்: ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை-16 ஐயா, நான் திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் சாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்கிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி பிடாரிதாங்கல் என்ற இடத்தில் பிளாட் எண். 149-ல் SPE Mono City -யில் 1000 சதுர அடி காலி மனையை எனது பெயரில் வாங்கினேன். தற்போது அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக பூவிருந்தவல்லி பஞ்சாயத்தில் Planning Permit -க்காக விண்ணப்பித்து அதற்காக அரசு கட்டணம் ரூ.17,200/-ஐயும் செலுத்தி கடந்த 23.08.2022 ஆம் தேதி அதற்கான உத்தரவு Planning Permit File No.1696/2022/A3 -ஐ பெற்றேன். அதை அவர்கள் கொடுக்கும் போது பஞ்சாயத்து ப்ளு பிரிண்ட் கட்டிட அனுமதியை பானவேடு தோட்டம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும் படி சொன்னார்கள். அதன்படி 19.09.2022 அன்று மதியம் சுமார் 3 மணியளவில் பானவேடு தோட்டம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து செக்ரடரி திரு.காந்தி என்பவரை சந்தித்து பஞ்சாயத்தின் கட்டிட அப்ரூவல் குறித்து கேட்டபோது, அதற்கு அவர் அரசு கட்டணமாக ரூ.10,700/-க்கு DD எடுக்க வேண்டும் என்று சொன்னார். எனது பணி நிமித்தத்தின் காரணமாக 28.09.2022 அன்று DD எடுத்துவிட்டு அதை 29.09.2022 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் திரு.காந்தியை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவரிடம் DD யை கொடுத்துவிட்டு கட்டிட அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டதா என்று கேட்டேன். அதற்கு அவர் ஊராட்சி தலைவர் திரு.சிவசங்கரை பார்க்கும் படி சொன்னார். நானும் அப்போதே ஊராட்சி தலைவரை சந்தித்தேன். அப்போது ஊராட்சி தலைவர் என்னிடம் செக்ரட்ரி திரு.காந்தியை போய் பார்க்கும்படி சொன்னதால், நானும் அப்போதே திரு.காந்தியின் அலுவலகம் சென்று அவரை பார்த்தேன். அவர் கட்டிட அனுமதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் அதற்கு ரூ.10,000/- செலவாகும் என்று தெரிவித்தார். அவர் மீண்டும் fees தான் கட்ட சொல்கிறார் என்று நினைத்து என் கையில் அப்போது

பணம் இல்லாததால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு என்னுடைய அலுவலக வேலை காரணமாக என்னால் அவரை சந்திக்க இயலவில்லை. அதன் பின்பு மீண்டும் கடந்த 11.10.2022 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் காந்தியின் அலுவலத்திற்கு சென்று பஞ்சாயத்து கட்டிட அனுமதி பற்றி கேட்டபோது பணம் ரூ.10,000/- கேட்டார். நான் அவரிடம், ஏற்கனவே கட்டிட அனுமதிக்கான தொகை ரூ.10,700/-ஐ செலுத்திவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த பணத்தை பஞ்சாயத்திற்காக கட்டினாய், அது தவிர்த்து எங்களுக்கு தனியாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.10,000/- லிருந்து தொகையை ரூ.7,000/- ஆக குறைத்து, எங்களுக்கு ரூ.7,000/-ஐ கொடுத்தால் கட்டிட அனுமதியை வழங்குகிறேன் என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார். பணத்தை உடனே கொடுத்துவிட்டு பெற்றுக் கொள்ளும்படியும் சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு வரும்படியும், மேலும் தான் ஊருக்கு செல்வதாகவும் ஒரு வாரம் கழித்து வரும்படியும் சொன்னார். அவர் அவ்வாறு கேட்ட போதுதான் அது லஞ்சப்பணம் என்று எனக்கு தெரியவந்தது. இந்நிலையில் 15.10.2022-ஆம் தேதி திரு.காந்தி என்னை செல்போனில் தொடர்பு கொண்டு தான் ஊரிலிருந்து வந்துவிட்டதாகவும் பணம் ரூ.7,000/-த்தை கொண்டு வந்து கொடுத்துவிட்டு பஞ்சாயத்து கட்டிட அனுமதியை பெற்றுக் கொள்ளும்படியும் தெரிவித்தார். எனக்கு பணம் லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட திரு.காந்தி என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருகிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு XXXXXX ஒப்பம் (ஆ. ரத்தினகுமார்) 17.10.2022. Received the compliant on 17.10.2022 @ 14.00 hrs. After verifying the genuineness of the compliant, complainant and reputation of the accused, I registered a case in V&AC CC-I Detachment in Cr.No.8/AC/2022/CC-I, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 18.10.2022 at 09.30 hrs.

Insp. CC-I
18.10.2022